Registered as a News Paper in Ceylon P. M. G. No: H: A. 9/300 of 1953.

விரோதிஞ (1889)ல் ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- குரோதி ஞு வைகாசிமீ உ௩உ வெள்ளிக்கிழமை (5 June. 1964) [இல-கூ]

## சைவ சமூகமும் குருமார் கடமையும்

[8—3—64-ல் உரும்பராய் கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சங்கத்தின் 14-வது ஆண்டு மகாநாட்டில், யாழ்/வண் – நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதம ஆசிரியர் பிரம்மஸ்ரீ க வை. ஆத்மநாதசர்மா அவர்கள் பேசியவற்றின் சாரம்,]

சைவ சமூகமும் குருமார் கடமையும் என்ற தலைப்பு நான்கு சொற்களைக் கொண்டது. அவை: சைவம், சமூகம், குருமார், கடமை என்பன

இனி அந்த நான்கு சொற்களும் இருசொற்றொடர்கள் ஆகின்றன, அவை: சைவ சமூகம், குருமார் கடமை என்பன.

முதலில் சொல்லளவிலே அவற்றின் பொருள் என்ன? சொற்றொடர்கள் ஆகும் போது அவற்றின் பொருள் யாவை? எனக் காண்போம்.

ஒரு சொல்லாவது, சொற்றொடராவது குறிக்கும் பொருளைக் கருதும்பொழுது அதன் வெளிப்படைப்பொருள், உள்ளீடான பொருள் என இருவகையில் அதனைக் காணலாம்,

முதலில் உள்ள சொல் சைவம் என்பது. சைவப் என்றால் என்ன? அது ஒரு தத்திதாந்த பதம். சிவ சம்பந்தமுடையதுசைவம். அதாவது சிவ பரம் பொருளோடு தொடர்புடையது. அகில உலகுக்கும் மூலகாரணமாக உள்ளதுசிவம். எப்படி எனப் பார்ப்போம். சிவம் மங்களகரமானது. சிவமே பரப்பிரமமம். சிவம் என்னும்போது சக்தியோடு சேர்ந்த சதாசிவமே பரப்பிரம்மமாகக் கருதப்படும். சிவ சாதாக்கியமாகிய சிவ லிங்க வடிவம் சிந்தனைக்குரியது.

“சி”கரம் சிவ பிரானையும் “வ”கரம் சிவ சக்தியையும் குறிக்கும். உயிரும் உடலும் போலவும், நெருப்பும் சூடும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பூவும் மணமும் போலவும் சொல்லும் பொருளும் போலவும் சிவமும் சிவசக்தியும் ஒன்றைவிட்டுஒன்று பிரிக்க முடியாதன. பிரித்தால் பயன்படாதன.

“இதந்தரு மடந்தையொடு
இயைந்து உயிர் உடம்புபோல்
வீதம்படல கங்களில் விரிந்தொளி
விளங்குவார்”

என்று கடவுள்மாமுனிவரும்;

“வாகர்த்தா விவ ஸம்ப்ருக்தௌ
வாகர்த்த: ப்ரதி பத்தயே,
ஜகத: பிதரௌ வந்தே
பார்வதீ பரமேசுவரௌ”

என்று கவியரசர் காளிதாசனும்;

“சொல்லும்” பொருளுமென
நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே”

என அபிராமிப் பட்டரும்; கூறியமை சான்றாகும்.

“சி” உடன்பாடு (Positive
“வ” எதிர்மறை (Negative)

உடன்பாடும் எதிர்மறையும் ஒன்றுபடுவதனாலேயே புதிய தொழிற்பாடு உண்டாகிறது என விஞ்ஞானிகள் கண்டனர். மின்சார இயக்கம் பலவும் இதற்குச் சான்றாகும். இந்த உண்மை எமக்குப் புதியது அன்று.

சிவனும் சிவசக்தியும் ஒன்றுபட்ட நிலையே உலகத் தோற்றம் என்ற உண்மை காலவரம்புக்கு உட்படாதது சிவம் வேறு, சிவசக்தி வேறு எனக் காண்பர் மிகக் கீழ்ப் படியிலுள்ள மக்கள். சிவமும் சிவசக்தியும் பிரிக்கமுடியாத ஒரே பரப்பிரமம் என உணர்வர் உண்மை ஞானிகள்.

ஆகவே, சைவம் என்பதற்கு வெளிப்படையான பொருள்: சிவபிரானைக் கடவுளாகக் கொண்டது சைவம் என்பது. உள்ளீடான பொருள்: அகில உலகும் அதிலுள்ள சராசரங்கள் யாவும் சைவமாம் என்பது.

சமூகம் என்பது கூட்டம்–தொகுதி. “சைவம்”, “சமூகம்” என்ற இரு சொற்களும் சேர்ந்து “சைவசமூகம்”என்ற சொற்றொடராகும் போது, வெளிப்பொருள்: சிவபிரானைப் பரம்பொருள் என வழிபடும் மக்கள் தொகுதி என்பதாம். உள்ளீடான பொருள்;

“யாதொரு தெய்வங் கொண்டீர்
அதுதெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்”

எனவரும் சித்தியார் வாக்குப் படி அகில உலகத்துச் சீவராசிகளையெல்லாம உள்ளடக்கிக் குறிக்கும்.

குருமார் என்பது மூன்றுவது சொல். குருவுக்கு எதிர்ச் சொல் ‘லகு’. குரு - பாரமானது லகு - பாரமற்றது (இலகுவானது). குரு - பெருமையுடையது, லகு - சிறுமை யுடையது.

எனவே பெருமையுடையவர் குருமார். பெரும்பாலும்...

தொடர்ச்சி 2-ம் பக்கம்

### நற்சிந்தனை
(தாலாட்டு)

வருத்தமற்ற மெய்யடியார்
மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே உன்னையன்றி
உண்டோநீகண்வளராய்.

### நாவலர் நல்வாக்கு

**நமக்கினிய பொருள் பரமசிவம்**

நமது சரீர நிலையாமையை நாமெல்லாம் சிறிதேனும் மறவாமல் எப்போதும் இடைவிடாமல் நினைவிலே வைத்துக் கொண்டு நமக்கு உள்ள படி இனியபொருள் இன்னதென்று அறிந்து அந்தப்பொருளைத்தேடவேண்டும். எல்லாவற்றிலும நமக்கு இனிய பொருள் உயிர்க் குயிராயுள்ள பரமசிவம்.

தேவாரம்

கனியினும் கட்டிபட்ட
கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை
நல்லாரினும
தனிமுடி கவித் தாளு
மரசினும்
இனயன் றன்னடைந்
தார்க்கிடை மருதனே,

இப்படி உள்ளவாறே நமக்கு இனியபொருளை நாம் அடையாமல் வீணாள் போக்குவோமாயின் நமக்கு நிகமேவஞ்சகரென்பதற்குச் சந்தேகமுண்டோ? இல்லை இல்லை!

ஆகையால் நாமெல்லாம் நீர்க்குமிழிபோலநிலையில்லாததாகியஇச் சரீரம்உள்ளபோதே நமக்கினிய பரமசிவனது திருவடிகளை மெய்யன்போடுவழிபட்டுய்ய வேண்டும். இந்த வழிபாட்டுக்கு அங்கம் பாவங்களை வெறுத்தலும்புண்ணியங்களைச் செய்தலும் இவையில்லாதவழிபாடு அபத்தியத்தைத் தள்ளாமலும் பத்தியங் கொள்ளாமலும் தின்கின்ற மருந்துக்குச் சமானமாகுமே.

ஆதலால் நாமெல்லாம் மனைவி மைந்தர் முதலிய சுற்றத்தார்களுடனே கூடியிருந்தாலும் வேளாண்மை வியாபாரம் உத்தியோகம் முதலிய லௌகிகங்களைச் செய்தாலும் சிவநிந்தை வேதாகம நிந்தை, கொலை களவு முதலிய பாவங்களை வெறுத்து இரக்கம் முதலிய புண்ணியங்களை உடையர்களாய் நமக்கினிய கடவுளுடைய திருவடிகளை நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மறவாமற் சிந்தித்து வழிபட்டு வர வேண்டும். ஐயையோ இப்படிச் செய்யோமாயின் நாம் எல்லாவுயிர்களுக்கும் ஏக நாயகராயிருக்கின்ற கடவுளுடைய ஆணையினாலே மறுமையிலே எவ்வளவு பெருந்தண்டனையை அடைவோம்!

## தேசியக்கூட்டரசாங்கமே நமக்கு வாழ்வளிக்கும்

—0—

[கொழும்பு திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள்]

நமது நாட்டினது உள்நாட்டுப் பிரச்சினைகள் வெளிநாட்டுத்தொடர்புகள் சர்வதேச ஒற்றுமை நல்லெண்ணம் ஆகியவைகள் திருத்தப்படுவது இக்காலம் அவசியம், இந்தத் திருத்தத்தை யுண்டுபண்ணுவதற்கு நமது நாட்டு தமிழ்ப் பிரமுகர்களையும் இணைத்துக் கொண்ட ஒரு தேசியகூட்டரசாங்கம் அவசியம் தேவை. ஈழநாட்டில் பண்டைக்காலந் தொடக்கப் நிறுவப்பட்டுள்ள அரசகருமங்களில் தமிழர்கள் முகிய உரிமை பெற்றிருந்தார்கள் என்பதை நாங்கள் மறக்கவொண்ணாது. சுதந்திரமடைந்தபின்பும் மந்திரி சபையில் தமிழ்ப்பிரதிநிதிகள்கடமையாற்றிவந்தனர். இப்பொழுது தமிழ்ப் பிரதிநிதிகளைப் புறக்கணித்துக் கொண்டு மந்திரிசபையை ஆக்கி நாட்டை ஆள்வது சனநாயக ஆட்சிமுறைக்கு முற்றும் முரணான செயலாகும். இப்பொழுது அமைக்கப்படப்போகின்ற கூட்டரசாங்கம் தகுதிவாய்ந்தவர்களைச் சேர்த்து அமைக்கப்படவிருந்தாலும் தமிழ்ப் பிரதிநிதிகளைச் சேர்க்காவிடின் அது வகுப்புவாத முறையில் அமைக்கப்பட்டதாகும்.

விசாக தினத்தில் கௌரவ பிரதம மந்திரியாரும் இலங்கைத் தேசாதிபதியும் பௌத்தமத மடாதிபதிகளும் கூறிய கருத்துக்களின்படி பௌத்த பெருமானுடைய மத்திய வழியையும் அசோகமன்னனுடைய தர்மத்தையும் கடைப்பிடித்து நமது ஆளும் கட்சியினர் மனம்மாறித் தமிழ் மக்களுக்கு நீதி செலுத்த முன்வர வேண்டும். முன்னர்க் கூறியபடி ஒரு கூட்டரசாங்கம் அமைக்கப்படுவது தேசிய சமூக ஒற்றுமைக்கு ஒரு விதையாகும். இவ்விதமாக அரசியலமைப்பு இப்பொழுதும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்பும் வேண்டப்படுகின்றது.

### இந்தியாவின் புதிய பிரதமர்

திரு. சாஸ்திரி அவர்கள் இந்தியாவின் புதிய பிரதமராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவருக்கு வயது 59, காந்தியடிகளின் விடுதலை இயக்கத்தில் பங்குபற்றி எட்டுமுறை சிறைவாசஞ் செய்தவர். மொத்தம் ஒன்பது ஆண்டு சிறைவாசம் அநுபவித்தவர். ஸ்ரீநேரு அவர்களின் கொள்கைகளைப்பின்பற்றி கடமையாற்றுவதாகவும், வறுமை வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றைப் போக்குவதே தமது முதல் கொள்கையெனவும் தேர்தல் முடிவில் கூறினார். அவர் பிறந்த இடம் காசி. தாவரவுணவு அருந்துபவர். புகைத்தல் மதுபானம் அருந்துதல் முதலிய தீய பழக்கங்கள் அவரிடம கிடையா.

### நயினாதீவு நாகபூசணி அம்பாள்கோயில் திருவிழா

—0—

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்திருவிழா எதிர்வரும் 10-6-64 ல் தொடங்கி 24-6-64 ல் முடிவெய்தும். திருவிழாக்காலமாகிய இறுதி ஐந்து நாட்களில் ஆலயத்திற்கு வரும் குழந்தைகளுக்கு ஆலய வீதியில் சப்ததீவு இந்து மகா சபையின் ஆதரவில் இலவசமாகப் பால் விநியோகிக்கப்படும். திருவிழாக்காலத்தில் பிரயாண வசதி, குடிதண்ணீர்வசதி, சுகாதாரவசதி ஆதியனவற்றைச்செவ்வனே நடாத்துவதற்கும் சமயப் பிரசாரம் செய்வதற்கும் சபை வேண்டிய முன் ஏற்பாடு செய்திருக்கின்றது. சபையின் கௌரவ காரியதரிசி இவற்றைச் செயல்படுத்துவாரென அறிவிக்கப்படுகின்றது.

### யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம்

வருகிற அக்டோபர்மாதம் யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாணப் பிரிவு இராமநாதன் கல்லூரியிலும், பரமேசுவரக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஜூன் மாத முடிவில் அல்லது ஜூலாய் முற்பகுதியில் ஆரம்பிக்கும் பல்கலைக்கழகப் புகு வகுப்புகள் இவ்வருடத்திலிருந்து அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும். சென்ற வருடம

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மாஅனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஞு வைகாசி மீ உ௩உ வெள்ளிக்கிழமை

## மாணவர்களுக்கோர் அறிவுரை

கல்வியென்னும் பதம் கல் என்னும் வினையடியாகப் பிறந்த தொழிற்பெயர். 'கல்' என்றால் தோண்டுதல் என்பது பொருள். ஆகவே கல்வியென்பது அஞ்ஞானத்தை யகழ்ந்தெடுத்தலாகும். கல்வி ஒருவனுக்கு அஞ்ஞானத்தை யகற்றி அறிவையளிக்கும் தொழிலாகும். அறிவு அளவிடுதற்கரிய பெரிய செலவம.

"அறிவுடையா ரெல்லா
முடையா ரறிவில்லா
ரென்னுடையரேனுமிலர்."

என்பது வள்ளுவர் வாக்கு அறிவுடையார் இலர் போலத் தோற்றினும எல்லாமுடையர். அறிவிலலார் எல்லாமுடையராயினும் ஒன்றுமிலராவர். கலவியின முக்கிய நோக்கம அறிவைப பெறுதலாக அமைய வேண்டும்.

இக்காலம் எமது நாட்டிலுள்ள கல்விச்சாலைகளில பயிலும் மாணவர்கள பரீட்சைகளிற் சித்தியடைந்து ஏதாயினும் உத்தியோகங்களைப் பெறுதலைக குறிககோளாகக்கொண்டு கலவி பயிலுவதினால் அறிவைப் பெறும் நோககத்தை நெகிழவிடுகின்றனர். மாணவர்களுக்குக் கல்வியையூட்டும ஆசிரியர்களும் கல்வித திட்டத்துககுப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளுய பெற்றோர்களும இக்குறையை நீககி மாணவர்கள கல்வியாலடைய வேண்டிய உண்மைப் பயனை யடைய உதவிபுரிய வேண்டும்.

ஆங்கிலேயருடைய ஆட்சியின கீழ் நமது நாடு இருந்த பொழுது மாணவர்கள ஆங்கில மொழியைப் பயின்று பரீட்சைகளில் சித்தி பெற்று, சில உத்தியோகங்களைப் பெறககூடிய வசதிகள் அவர்களுக்கு அக காலத்திலிருந்தன. நாடு சுதந்திரமடைந்த பின்பும மாணவர்கள் உத்தியோகங்களைப்பெறும் நோககத்தையே கொண்டு கலவி பயில்கின்றனர்.

இக்காலத்தில் முக்கியமாகத் தமிழ் மாணவர்களுக்கு உத்தியோகங்கள் கிடைப்பது முயற்கொம்பாகும். அரசாங்கம அமைத்துள்ள தனிச்சிங்களச் சட்டத்தின் பேறுகவும் சாதிவிகிதப்படி உத்தியோகங்களை வழங்கும் ஏற்பாட்டினாலும் தமிழ் மாணவர்கள் உத்தியோகங்களை எதிர்காலத்தில் பெறுதல் முடியாது. இவற்றையெல்லாம் நனகு சிந்தித்தே இலங்கைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பேராசிரியர் திரு. ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தமிழ் மாணவர்களுக்கு அறிவுரை பகரும் பொழுது பினவருமாறு கூறியுள்ளார்.

'படித்த வாலிபரே அரசாங்கத்திடம் கைநீட்டாதீர், பத்திலொரு தொகை உத்தியோகங்கூட உங்களுக்குக் கிடைக்குமோ வென்பது சந்தேகம். நீங்கள் படித்த விஞ்ஞானத்தை, கமத்தை அபிவிருத்தி செய்யப் பயன் படுத்துங்கள். உங்கள் வாழ்க்கை மலரக் கந்த புராணத்தைப் பாராயணஞ் செய்து தமிழையும் சைவத்தையும் வளருங்கள்' பேராசிரியருடைய கருத்துக்கள் பொன்னேபோல போற்றத்தக்கன. கந்தபுராணத்தைக்கற்றுச் சைவ வாழ்க்கையை மாணவர்கள் நடத்தினால் அவர்களுக்கு ஒருவித குறையும் ஏற்படாது நமது நாட்டிலுள்ள வறுமையைப் போக்குவதற்குக் கமத்தொழிலே அவசியம் வேண்டப்படுவது.

"இலமென்றசைஇ
யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ளகும்"

யாம் வறியோமென்று சொல்லிச் சோம்பித்திரிவாரைக் கண்டால் நிலமென்று சொல்லப்படுகின்ற பூமாதேவி தன்னுள்ளே சிரிப்பாளாம். உழவு தொழிலைச்செய்கின்றவர்களுக்குப் பொருளை உதவி அவர்களது பசிப்பிணியை நீக்குதற்குத் தாம் காத்துக்கொண்டிருக்க மக்கள் அதனைப் புரியாது சோம்பி வருந்துகின்றார்களேயென அவர்களுடைய அறியாமையை நோக்கிப் பூமாதேவி பரிகாசஞ் செய்து சிரிக்கின்றாள் என வள்ளுவர் கூறுகின்றார். மக்கள் உயிர் வாழ்தற்கு இன்றியமையாத தொழில் உழவே. மாணவர்கள் தங்கள் படிப்புக்காலத்திலும், படிப்பு முடிந்த பின்பும் அதனைச் செய்து வருவார்களானால் நாட்டில் வறுமையிராது. எங்கள் தெய்வத் தமிழையும் சைவ சமயத்தையும் பேணுவதும் மாணவர்கள் கடனாகும், ஞானத்தைப் பெறுதற்குத் தமிழ மொழிபோல் சிறந்தமொழி உலகிலில்லை, இறைவனடியைச் சேர்வதற்குச் சைவ சமயத்தைப்போன்ற சமயம் வேறில்லை. ஆகையினாற்றான் 'சைவ சமயமே சமயம்' எனத் தாயுமான சுவாமிகள் தேற்றேகாரம் கொடுத்துச் சைவ சமயத்தை விதந்து கூறியுள்ளார். முன்னர்க் கூறிய பேராசிரியருடைய சிறந்த புத்திமதிகளை மாணவர்கள் நன்கு போற்றித் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட நடத்துவார்களாக. அவ்விதம் அவர்கள் வாழ்வார்களானால் தாய் மொழியும் சைவ சமயமும் பாதுகாக்கப்படும. தமிழினம் வாழும்; தமிழையும் சைவத்தையும் பேணும பொறுப்பு மாணவர்கள கையிலிருக்கின்றது.

—0—

## சைவ சமூகமும் குரு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமை? உயரத்திலா, பருமனிலா; அகலத்திலா, எடையிலா பெருமையுடையவர் குருமார்? இவை எவற்றிலுமல்ல-பண்பாட்டில் பெருமையுடையவர் குருமார்.

பண்பாடு என்ற சொல் பல சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியது. உயர்ந்த ஜாதியிலே பிறந்ததனால் மாத்திரம் சிறந்த பண்பாடு அமையாது. ஆம் - ஜாதி வரம்பு என்றவுடனே பல கருத்துக்கள் விரிகின்றன. அது தனியாக விரித்துப் பேசவேண்டிய விஷயம். ஆயினும் இந்த இடத்தில சிறிது குறிப்பிட வேண்டியிருக்கிறது.

"ஜன்மநா ஜாயதே சூத்ர:
கர்மணு ஜாயதே துவிஜ:"
என்றும்,

"பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"
என்றும் அமைந்த வாக்குகள் சிந்தனைக்கு உரியன.

பிறவியினால் மக்கள் யாவரும் சமமாகவே மதிக்கத் தக்கவர், ஆனால் அவரவர் செய்யும் செயல்களினால் தம்மை உயர்ந்தவராகவோ, தாழ்ந்தவராகவோ தம்மைத் தாமே ஆக்கிக்கொள்ளுகிறார்கள். ஒருவனைப் பிறர் எவரும் உயர்த்தவோ தாழ்த்தவோ முடியாது. இங்கே எழுகின்றது ஒரு பெரிய பிரச்சினை. அதாவது:- "சாதிக் கட்டுப்பாடு" என்பது மனிதனால் ஆக்கப்பட்டதுதானே. அது ஒருகாலத்தில் வேண்டியிருந்தது. அதனால சாதிக் கட்டுப்பாட்டை அமைத்து வைத்தார்கள். அது இப்போது வேண்டாத ஒன்றாகக் காணப்படுகிறது. அதுமாத்திரமல்ல, சாதிக்கட்டுப்பாட்டினால் பல இடர்ப்பாடுகள், வசதிக்குறைவுகள் நேருகின்றன. அதனால் சாதிக்கட்டுப்பாட்டை முற்றாக ஒழிகக வேண்டும் என்று இக்கால மக்களுள்ளே பலர் அதிதீவிரமாக முயற்சிக்கிறார்கள். இது விஷயமாகச் சிறிது நுணுகிச் சிந்திக்க வேண்டும்.

உலகம் பலவிதம். தேசந்தோறும் பாஷை வேறு; மக்கள் இனம் வேறு; தொழில் வேறு; பழக்கவழக்கம வேறு, அமைப்பு வேறு. உணவு வகை வேறு, கொள்கை வேறு, ஆயினும் மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான, இறக்கிறான். இந்த மூன்று விஷயத்தில் மாத்திரம் உலகம் முழுவதும் சமம்: இந்த மூன்றைப் போலவே ஏனைய யாவும் அகில உலகுக்கும் அமைய வேண்டும் என்று எவராவது சொல்வாரா? சொன்னால் அது பொருந்துமா? சிந்திக்க வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே ஆன்மலட்சியம். அதுவே அழகு, பண்பாடு. இயற்கைப் பொருள்களிலே அணுவளவுதானும் பேதமில்லாத இரு பொருள்களைக் காணமுடியுமா? காணமுடியாது. ஆயினும், அவற்றில் ஒற்றுமைகண்டு மனிதன் இன்புறுகிறான்.

வேறுபட்டு உலகில் ஒன்றுபட்ட தன்மையை விளக்க வந்த கபிலர்பெருமான் கூறியதாவது:-

"மாரிதான் சிலரை
வரைந்து பெய்யுமோ
காற்றுஞ் சிலரை நீககி வீசுமோ
கதிரோன் சிலரைக் காயேன்
எனுமோ அதனால் -
ஒன்றே செய்யவும்
வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும்
வேண்டும, நன்றும்
இன்றே செய்யவும்
வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும
வேண்டும், இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்
நம்முடை முறைநான்
ஆவதும் அறியீர்
நமனுடை முறைநான்
ஆவதும் அறியீர்
எப்போ தாயினும
கூற்றுவன் வருவான்
அப்போதந்தக்
கூற்றுவன் தன்னைப்
போற்றினும் போகான்
பொருளொடும் போகான்
நல்லாரென் றெண்ணான்
தீயாரென் றுன்னான்
தரியான் ஒருகணம்தறுகணாளன்
உடல்கொடு போகான
உயிர்கொடு போவான்"
என்பதாகும்.

இயற்கைப்பொருள்களிலே எந்தப்பொருளில் சாதிவேறுபாடு இல்லை? எல்லாவற்றிலும் உண்டு, ஆகவே மனிதனிலே மாத்திரம் சாதிவேறுபாடு அற்றுவிட வேணடாமா? அற்றுவிட முடியுமா? ஒருபோதும் அற்றுவிடாது. மிக எளிய பிராணியாகிய நாய்களிலேதானும் சாதி வேறுபாடு மாறக்கூடாது என்று பாதுகாத்து அவற்றை வளர்க்கும் மனிதருட் சிலரினுஞ் சிலர் மனிதரிலே சாதி வேறுபாட்டை நீக்கிவிடுவோம என்று வாய்ப்பறை அறைகிறார்கள. இது என்ன விந்தை!

உலகம் உள்ளவரை சாதி வேறுபாடு நீங்காது; நீக்கவும முடியாது.

சாதி வேறுபாட்டை நீக்க வேண்டும் என்று எழுந்த பிரச்சினைக்குக் காரணம யாது? ஆதியில் மக்களினம் ஒருவருக்கொருவர் உதவியாளர்களாக வாழ்ந்தார்கள். இடைக்காலத்தில் உயர்சாதி மக்களுட் சிலர் தாம முறைகேடாக இன்புறுவதன பொருட்டு ஒழிந்த சிலரை அடக்கிஒடுக்கத்துன்புறுத்தத் தலைப்பட்டார்கள். அதுவே இந்தக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று, சாதி காரணமாகச் செய்யும கொடுமை ஒழிக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாகச் சாதிவேறுபாட்டையே முற்றாக அழிக்க முனைவது, வீட்டுக்கூரையில் புகுந்த எலியை விரட்டுவதற்குப் பதிலாக வீட்டையே தீக்கொளுவி எரித்தழிக்க முனைவதற்குச் சமமாகும.

சாதி வேறுபாடு பற்றி வேதக்கருத்தைச சிறிது சிந்திப்போம. புருஷ சூக்தத்திலே பின்வரும் வாக்கியங்கள் வருகின்றன.

'யத்புருஷம் வ்யதது:
கததாவ்யகல்பயந்
முகங்கிமஸ்ய கௌபாஹூ.
கா ஊருபாதாவுச்யேதே.
டராம்ஹணேஸ்யமுகமாயத்
பாஹூரா ஜந்ய: கருத:
ஊரு ததஸ்ய யத்வைச்ய:
பத்ப்யாம் சூதரோ அஜாயதே
சந்திரமா மனஸோ ஜாத:
சக்ஷோ: ஸூர்யோ அஜாயத
முகாதிந்தர: சாக்கிச்ச
ப்ராணாத் வாயுராஜாயத"

ப்ராண வடிவான தேவர்கள் எப்போது விராட்புருடனைச் சங்கற்பத்தாற் தோற்றுவித்தார்களோ அப்போது எந்த எந்த வடிவாக ஆக்கினார்கள்? முகம் எதுவாக ஆயிற்று? கைகளாக எவர்கள் சொல்லப்படுகிறார்கள்? துடைகளாகவும், பாதங்களாகவும் எவர்கள் சொல்லப்படுகிறார்கள் என்றால் — பிராம்ஹண ஜாதியினரே விராட் புருஷனது முகமானார்கள். க்ஷத்திரிய ஜாதியினரே விராட் புருஷனது கையானார்கள். வைசிய ஜாதியினரே விராட்புருடனது துடையானார்கள். சூத்திர ஜாதியினரே விராட்புருடனது பாதமானார்கள். விராட்புருஷனது மனத்திலிருந்து சந்திரனும், கண்ணிலிருந்து சூரியனும், முகத்திலிருந்து இந்திரன், அக்கினி என்பவர்களும், பிராணனிலிருந்து வாயுவும் உற்பத்தியானார்கள்.

இந்த வேத வர்ணனையிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில், எமது தேகத்தின் அவயவங்களாகிய முகம், கை கால் முதலிய உறுப்புக்களில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆயினும் அவை யாவும் தத்தமக்கு உரிய செயல்களைச் செய்கின்றன; சமமாகப் பேணப்படுகின்றன அன்றோ. அதுபோலவே, விராட்புருடனது உறுப்புக்களாகிய பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் வேறுபாடு உளர் என்பதும். அவர் தத்தம் தொழில்களைச் செய்ய வேண்டும் என்பதும், சமமாகப் பேணப்பட வேண்டும் என்பதும் அமையும்.

—தொடரும்.

## வில்லூன்றி விநாயகர் ஆலயம்

எதிர்வரும் 9-6-64 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும், பிற்பகல் 1 மணியளவில் பஞ்சமுகார்ச்சனையும் நடைபெற விநாயகர் திருவருள்பாலித்துள்ளார்.

1-6-64 முதல் கொடியேற்ற வைபவத்துடன் உற்சவம் நடைபெற்று வருகின்றது. 10 நாட்கள் விழா நடைபெறும். வேதாகம முறைப்படியும்—காலந்தவறாத பூசைகளும் ஒழுங்காய நடைபெற்று வரும் கோயிலாகும். கீரிமலை போல ஸ்நானம் செய்வதற்குச் சிறந்த கேணியும் இங்குண்டு.

—

## பெரியபுராணபடனப் பூர்த்தி

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம்விநாயகர்ஆலயத்தில் சென்ற மூன்று மாச காலமாக பெரிய புராணம் பாராயணஞ் செய்து எதிர்வரும் வைகாசி மாசம் 24-ந் திகதி (6-6-64) சனிக்கிழமை புராணப்படனம், மகா அபிஷேகத்துடனும், மாகேஸ்வர பூசையுடனும் பூர்த்தியாகும். சென்ற மூன்றுமாச காலமாக தினமும் சித்தாந்தபண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் பக்தியுடன்கேட்போர் பரவசப்படும்வகையில் பயன் சொலலியுள்ளார். அடியார்கள் தினமும் பக்தியுடன் பெரியபுராண விளக்கத்தைக் கேட்டு இன்புற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயபாடத் தேர்தல் 1964

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் சமயபாடப்பரீட்சை வருகிற ஆகஸ்டு மாதம் நடத்தப்படும். தேவாரம் உபங்கியாசம் புராண படனம் ஆகிய மூன்றும் தேர்தலுக்குரிய பாடங்களாகும். தேர்தல் மேற்பிரிவும் மத்திய பிரிவு கீழ்ப்பிரிவு ஆரம்ப பிரிவு என்ற பாகுபாடுகளையுடையது பெண்பிள்ளைகளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் வெவ்வேறு பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்.

| பிரவேசப் பணம் | | |
|---|---|---|
| | ஆரம்ப பிரிவு: | -50 |
| | கீழ்ப்பிரிவு: | -75 |
| | மத்திய பிரிவு: | 1-00 |
| | மேற்பிரிவு: | 1-25 |
| | புராணபடனம்: | 1-00 |

தேர்தல்களில் பங்குபற்ற விரும்பும் பிள்ளைகள் தங்கள் பெயரையும், வயதையும் குறித்துத் தலைமையாசிரியருடைய கைச்சாத்துடன் நுழைவு பத்திரங்களை 29-6-64-க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வைப்பார்களாக சபைகள்மூலம் நுழைவுப்பத்திரங்களை அனுப்புகின்ற பிள்ளைகள் சபைத்தலைவர் அல்லது காரியதரிசியின் கைச்சாத்துடன் அவற்றை அனுப்பி வைக்கலாம்.

தேர்தல் தேதிகள்:

தேவாரம் — 23-8-64
உபங்கியாசம் - புராணபடனம் — 15-8-64

பரிசுபெறும் பிள்ளைகள் பிறப்புக்கொப்பி சமர்ப்பிக்கவேண்டும் 1964 டிசம்பர் மாதத்தில் நடைபெறும் சைவ மகாநாட்டில் பரிசில்கள் வழங்கப்படும்.

பாடவிதானம் வேண்டுவோர் எமக்கு எழுதுக.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 3-4-64.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

---

இவ்வாரம் 7-6-64 — 13-6-64

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

குடும்பத்தில் சில சச்சரவுகள், சண்டைக்கு நேர் முந்துதல், சுகவீனம், பணநன்மையுண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இரகசிய எதிரிகளால் இடர்கள், சுகவீனம், அதிக வேலை, ஏற்ற கூலியின்மை உண்டாம்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

வெற்றிக்காகக் கடுமையாகப் பாடுபட வேண்டும். பண இலாபம் நிச்சயம். நிம்மதியிருக்காது சுகவீனமுண்டாம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

சுகவீனம், குடும்பச்சச்சரவு. பணநன்மை, புகழ், மூத்த உடன்பிறவிகளினதும் நண்பர்களதும் மிக்க உதவியுண்டாம்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம். 1-ம் பாதம்.

குடும்பத்தில் பிழையான விளக்கங்கள். சுகவீனம், நிச்சயவெற்றி பழைய முதலீடுகள் நற்பயன் தருதல் உண்டாம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ப் பாதம் அத்தம் சித்திரை 1, 2ப் பாதம்.

ஞாயிறு திங்களில் தொல்லைகளும் மிகுதி நாட்கள் நிம்மதியீனம், சிறு விபத்துக்கள், கலகங்களுண்டாம்.

**துலாம்**, சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேவையற்ற வகைகளுக்குள்ளாதலும் புதுமுயற்சிகளில் தடங்கலும் வெற்றியும் சுகவீனமும் உண்டாம், திங்கள் காலை செவ்வாய் புதன் எச்சரிக்கை.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம். எதிர்ப்பான்மையைச்சேர்ந்த நண்பர்கள் மிக உதவுவர். புதன் மாலை வியாழன் வெள்ளி எச்சரிக்கை. சுகவீனத்திற்கிடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நண்பர்களுடன் தவறான விளக்கம், குடும்பக் கலகம் உண்டாம், வெள்ளி மாலை சனி எச்சரிக்கை. பண இலாபம்நிச்சயம். எதிர்ப்புக் தூரத்துவிடும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

வயிற்றுக் கோளாறுக்கிடமுண்டு பணக்கஷ்டம் தாய்வழி உறவினரின் தொல்லை உண்டாம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

சிலபுல இலாபம்நிச்சயம் எதிர்ப்பான்மை நண்பர்கள் மிக உதவுவர் நிம்மதியிருக்காது. இனத்தவருடன் மோதல்களுக்கிடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.
1, 2, 3ம் பாதம்

எண்ணியபடி நடப்பது அரிது பணமளவில் நல்லவாரம். இடர்களிலிருந்து நண்பர்கள் மீட்பர், புகழும் சமூகவெற்றியும்நிச்சயம்

## பிரியாவிடை விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் உதவி யாசிரியராகவும் முதல்வராகவும் கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றி வந்த திரு. C சபாரத்தினம் B. Sc. அவர்கள் தமது 60 வயதுப் பூர்த்தியடைந்தமையினால் இளைப்பாறுகின்றனர். அன்னாருக்கு இன்று பி. ப. 4 மணியளவில் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் ஒரு பிரியாவிடைக் கூட்டம் நடத்த ஒழுங்கு செய்துள்ளார்கள்.

## கந்தபுராணப் பூர்த்திப் படிப்பு

அச்சுவேலி பிள்ளையார்கோயிலில் சென்ற சில மாதங்களுக்குமுன் ஆரம்பித்து நடைபெற்று வருகின்ற கந்தபுராண படனத்தின் பூர்த்திப்படிப்பு (வள்ளியம்மை திருமணப் படலம்) இன்று இரவு 7 மணியளவில் தொடங்கி நடைபெறும். புராணபடனத்தில் வல்லவர்களான சிறந்த அறிஞர்கள் ஷை படிப்பில் கலந்து கொள்வார்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில், லோறன்ஸ் வல்லிபுரம் சின்னத்தம்பி
—பதில் வழக்காளி

வழக்கு இல. M.B. 3307

எதிராக

உடுவில், சீனிவ சகம் அன்ரன் அபிவாசகம் கைம்பெண் லிலலி இராசம்மா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 3307-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964-ம் ஆண்டு ஆடிமாதம் 15-ந் திகதி (15-7-64 புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 1620-ம் 28-3-60 தொடக்கம் 7-6-60 வரைக்கும் ரூபா 1000-க்கு 12வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும் வரைக்கும் 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 176-37 சதமும், மேலும் பதில் வழக்காளியைச் சேர்த்ததால் ஏற்பட்ட முத்திரைச்செலவு ரூபா 58-60 சதமும், கீழ்க்கண்ட ஆதனம் குறிப்பிட்ட தீர்வையினைப்பரால் மேற்கண்ட தொகையையும் கோட்டுச்செலவு ரூபா 235-35 சதமும் அறவிட பிரத்தியேகமாக கட்டப்பட்டுள்ளது.

காணிவிபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப பகுதி, உடுவில் கோயிற்பற்று. உடுவில் இறை, "வீரநாக்கன் களவு" நிலப்பரப்பு 5 குளி 15, வீடும், அடுக்களையும், வான்பயிர் செய்பயிர்களும், வடமேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் பங்கும், தூர்வைப்பங்கும், வழி வாய்க்கால் உரிமையும். எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண்சாசி தங்கம்மாவுக்கும் பங்காளருக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம். வடக்கு கையொழுங்கை மூகப்பும் சின்னப்பொடி சண்முகத்தின் ஆதனமும், மேற்கு சின்னப்பொடி சண்முகத்தின் ஆதனம், தெற்கு நன்னியன் சடையனுக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனம் தடங்கலும். இதில் சொரியலாக அரைப்பங்கும் வீட்டில் மேற்குப்பக்கமாகவுள்ள அரைப்பங்கும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனர், விலைமதிப்பாளர்
Commissioner of Sales. Valuer,
& Licensed Auctioneer.
தபாற்கந்தோரடி,
நவாலி, மானிப்பாய்,
3-6-64.
M 63 5-6-64

## திருத்தம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

இல. M-B, 4938

29-5-64 இதழில் வெளிவந்த M B 4938ம் இலக்க கோட்டு விற்பனவு விளம்பரத்தில் 2ம் ஆதனத்தின் எல்லைகளில் மேற்கு மயிலன் வல்லிக்கும், சந்தரசேகரம் பனைவி சௌந்திரநாயகத்துக்குமுரிய ஆதனங்கள். தெற்கு பின்வரும் 3ம் ஆதனமும், சொலலப்பட்ட சௌந்திரநாயகத்தினுதனமும் எனக்கொள்க.

## அடைவு நகை. ஏல விற்பனவு

காங்கேசன்துறையில் (யாழ்-காங்கேசன்துறை வீதி, அடைவு பிடிக்கும் திரு. செல்லையா செல்லத்துரை அவர்களிடம் 1960 ம் ஞு பெப்ரவரி மீ 1 உ தொடக்கம் 1962 ம் ஞு ஏப்பிரல் 30 உ வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 1964 ஞு யூன் மீ 25 உ (25-6-64, வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர்,
543, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம், 2-6-64.
M. 62 5, 12-6-64.

## கதாப்பிரசங்கம்

எதிர்வரும் 7-6-64ஞாயிற்றுக்கிழமை இணுவில்பரராசசேகரப்பிள்ளையார்கோயிலில் நடைபெறவிருக்கும் 6ம் திருவிழாவில் மாலை 6-30 மணியிலிருந்து அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி (அளவையூர் சஞ்சீவி) அவர்களின் 'திருமுறை தந்த பிரணவ ரூபன்' என்ற சங்கீதகதாப்பிரசங்கம் நடைபெறவிருக்கிறது. அன்று அவர் பிள்ளையார்மீது பாடியளித்த தோத்திரப் பாமாலையும இலவசமாக வெளியிடப் படுகிறது.

## பாராட்டுவிழா

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்சங்கத்தினால் 'இரசிகமணி' கனக. செந்திநாதன் அவர்களுக்கு இன்று மாலை 6 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் திரு. சி. ஸ்ரீனிவாசன் எம். ஏ. தலைமையில் பாராட்டுவிழா நடத்தப்பெற இருக்கிறது. இவ்விழாவில் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை திரு தெ. து. ஜயரத்தினம், பண்டிதர் பொன கிருஷ்ணபிள்ளை, திரு. K. கிருஷ்ணபிள்ளை, பண்டிதை தங்கமமா அப்பாக்குட்டி ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

## கோட்டு விற்னவு விளம்பரம்

யாழ்ப்பாணம், உடுவில்
1, தம்பாபிள்ளை தங்கராசா
2, பெண் ஞானபூரணம்
—வழக்காளிகள்

இல. M B, 4315

எதிராக

யாழ்ப்பாணம், வசாவிளான்
1. சுப்பா சின்னத்தம்பி
2. பெண் சின்னுச்சிப்பிள்ளை
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B, 4315-ம் இலக்க வழக்கில எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 11-ம் திகதி (11-7-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபாய் 1257-25-ம், இதில் ரூபாய் 900-க்கு 3-10-61 திகதி தொடக்கம் 18-6-62 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 217-74 சதம்,

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக்கோவிற்பற்று பலாலியிறை "விற்கயிட்டி" நிலப்பரப்பு 63 -1/8-ம, கிணறும், தென்னை பலாக்களும். எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு கந்தையா கைம்பெண் இராசம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு கந்தவனம் பெண் கதிராசிக்கும் வல்லிபுரம் இளையதம்பிக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கந்தையா கைம்பெண் இராசம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் நிலப்பரப்பு ($7\frac{1}{2}$-ம்) அதற்குரிய வைகளும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Valuer,
Licensed Auctioneer.
தெல்லிப்பழை. 9-5-1964.
M 56 5-6-64

## தெய்வ ஒளி

மலைமகளே! சூரியனை ஆயிரக்கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறாய். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமளகரமான பாதங்களால் ஆன்மாக்களுக்குப் புறம்பும் உள்ளுமிருளை அகற்றி ஆட்கொள்ளுகறீர்.

-நாராயண பட்டோத்திரி.

## அணிந்துரை அரங்கம்

**ஆசௌச தீபிகை**

இயற்றியவர்:
நெல்லையம்பதி தமிழாகரர்.

தாற்பரிய உரை எழுதியவர்:
துன்னாலை, பிரம்மஸ்ரீ.
ஆ சபாரத்தினக்குருக்கள்

பதிப்பு: கோக்குவில்
சோதிடப்பிரகாச யந்திரசாலை

விலை ரூபா: 1-50.

மக்களுக்குச் சனனம், மரணம் சம்பந்தமாக ஆசௌசம் ஏற்படும் என்பது சைவ நூற்றுணிபு. ஆசௌச காலமும் அது நீங்கும் முறைகளும் இந்த நூலில் கூறப்பட்டிருக்கின்றன. சிவாகமங்களில் காணப்படுகின்ற ஆசௌசவிதிகளைத் தமிழ்மொழியில் செய்யுள் வடிவாக தமிழாகரர் இயற்றி உதவினர். செய்யுட்களின் கருத்தை எளிதில் யாவரும் படித்து உணர்வதற்காக தாற்பரிய உரை நூலின் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றது இதனைப் பிரசுரஞ்செய்த பிரம்மஸ்ரீ ஆ சபாரத்தினக்குருக்கள் அவர்களுக்கு எல்லோரும் நன்றியறிதல் உள்ளவர்களாக விருக்க வேண்டும். இந்நூல் ஒவ்வொரு சைவமகனிடமும் இருப்பது அவசியம்.

## COMMISSION SALE

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு வழக்கு இலக்கம். 463 Misc
அந்தோனிப்பிள்ளை சன்ரியகோ பெண் அன்னம்மா
கரவெட்டி வடக்கு
விண்ணப்பகாரர்.

எதிராக.

அந்தோனிப்பிள்ளை சன்ரியகோ
கரவெட்டி மேற்கு
பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்த்த தீர்வையின்படியும் குறித்தகோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் காணும் ஆதனத்தை 1964 ம் ஆ ஆடி மீ 8ந் திகதி (8-7-64) புதன்கிழமை முற்பகல் 9-00 மணியளவில் குறித்த ஆதனத்தினிடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதிகட்டைவேலி கோயிற்பற்று கரவெட்டி குருவிக்குறிச்சியிலுள்ள 'குருக்கள்பாதி' நிலபரப்பு 1 குளி 16 15/32 எல்லைகிழக்கு வைத்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளைக்குரிய ஆதனம, வடக்கு ஆறுமுகம் பெண் சின்னனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு பஸ்தியாம்பிள்ளை பெண் எலிசபேத்தம்மாவுக்குமுடைய ஆதனம், தெற்கு யகோப்பிள்ளை பெண் பாவிலப்பிள்ளைக்குமுடைய ஆதனமும, யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பிரிவிடல் வழக்கில் அணைத்த 12772 இலக்கத்தில் வீந்தாரிக்கப்பட்ட படத்தின்படி பங்குக்கிணறு துண்டு 17 ம் இலக்கத்தில் அதற்குட்பட்ட வழிவாய்க்காலுரித்தும்.

க. நல்லலிங்கம்,
விற்பனை நிர்வாகஸ்தரும்
விலைமதிப்பாளரும்,
Commissioner of Sales & Valuer.
"சிவலிங்க நிலையம்"
வி. மு. ரோட்,
பருத்தித்துறை, 10-5-64.
M. 57 5-6-64

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
புங்குடுதீவு மேற்கு
சோமநாதர் நாகராசா
—வழக்காளி
இல. M.B. 5132
எதிராக
1. புங்குடுதீவு கிழக்கு ஆகஸ்டின் மார்க்கு
2, ஷை யூர் பெண் மரிசிலினுள்
எதிராளிகள்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 5132 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964 ம் ஆ ஆடி 6ம திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

திர்வைத்தொகை: மூதல்வட்டி ரூபா 2883-75 சதமும் ரூபா 1500 க்கு 2-10-62 தொடககம் 11-2-1963 வரை 18 வீதமான வட்டியும் அதன்மேல் மூழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 6 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 239-09 சதம்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக தீவுப்பகுதி புங்குடுதீவுக கோவிற்பற்று புங்குடுதீவு இறை 'மணற்காட்டுத தோட்டம்' பரநீ இல பன்னிரண்டு, குளி ஆறரை (பர நீ இல 12 குளி 6½ செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் எல்லை கிழக்கும் தெற்கும் இராமநாதர் மூததையாவிற்குரிய வாதனம். வடக்கு கலடடி பிள்ளையார் கோவிலிற்குரியவாதனம். மேற்கு கபிரியேல் ஆகஸ்டினுக்குரியவாதனம். இதடங்கலிற் சொரியலாய் ¾ பாகம்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
1954-ம்ஞ வைகாசிமீ 22-ம்வ
காரைநகர்,
M 60 5-6-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி தெற்கு (1) நாகலிங்கம் கனகநாயகமும் பெண்
(2) கமலாதேவியும்
—வழககாளிகள்
இல M.B, 5178
எதிராக
கொக்குவில் கொக்குவில் கிழக்கு புந்பத்தை ரோட்
(1) சரவணமுத்து கனகரத்தினமும் பெண்
(2) விசயலட்சுமியும்
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 5178ம் இலக்க வழககில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1964ம்ஞ ஆடிமீ 4ந்வ 4-7-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்,

திர்வைத்தொகை மூதல்வட்டி ரூபா 9980 ம் இதில் ரூபா 8000 க்கும் 25-10-62 தொடக்கம் 12-3-63வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும் அதன் பின் மூழுத தொகைக்கும் 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 289 சதம் 60. இதில் ரூபா 1000 மும் 28-11-63 ல் எதிர்களால் கொடுபட்டது,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்நல்லூர்க்கோயிற்பற்று கொக்குவில் கிழக்கிறை "பெரிய சீமா" நிலப்பரப்பு (3½யும்) மூன்றரையும் கல்வீடும் பெரிய சீமா நிலப்பரப்பு (1½யும்) ஒன்றரையும் இவ் விரு பிரிவும் கூடி நிலப்பரப்பு ஐந்தும் கல்வீடும் கிணற்றில் பங்கும் பயிர் வகைகளும் சொல்லப்பட்ட நிலப்பரப்பு ஐந்துக்கும் எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் புவனேஸ்வரியினுதனம். வடக்கு கந்தையா பாலசுப்பிரமணியத்தினுதனம்.மேற்கு ரோட்டு. தெற்கு ஒழுங்கை. இதடங்கலும். கல்வீடும் கிணற்றுப் பங்கும் மற்றும் இதற்குட்பட்டவைகளும்,

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனர்,
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
12-5-1964,
M 59 5-6-64,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
மெக்கன்டைல் வங்கி வரைவுளது
—வழககாளி
இல, M,B. 5334
எதிராக
380. நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
1, குழந்தைவேலு. கதிரவேலு அல்லது முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலு (சொந்தககாரர் மலாயா கம்ப)
2. கதிரவேலுபெண் சிவயோகம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B, 5334-ம இலகக வழக்கில் எனககுககிடைதத கோட்டுக கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணி 1964ஞ ஆடிமீ 11-ம்வ சனிககிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபா 27432-23 சதம், 17-1-63 தொடக்கம் 16-9-63 வரைககும் 9 வீத வட்டியும் அதன்பின் மூழுத்தொகைககுப் இறுககும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 491-50 சதம் ரூபா 18771 – 94 சதம் கொடுபட்ட தொகை கழிகக வேண்டும்.

காணியின் விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக, யாழ்ப்பாணம் நகரசபையின் 14-ம் வட்டாரமாகிய வண்ணார்பண்ணை தென்மேற்கிறை, வரியிறை இல, 380 நாவலர் வீதி (முன்பு 234) "மாவடி இலகடி சமபுநாதன் தறை" நில. பரப்பு 4, குளி 4 5/10 (றுட் 1, பேச்சஸ் 3.2) கட்டிடங்களும, இது 1960-ம்ஞ மார்கழிமீ 19வ உத்தரவு பெற்ற உலாந்தா திரு.எஸ். ஏகாம்பரம அவர்களால் 951 - ம் இல, தயாரிககப்பட்ட படத்தில் ஒன்றும் துண்டாக குறிககப்பட்டுள்ளது. இதற்கு எல்லை வடகிழகு நாவலர் வீதி, தென்கிழக்கு செல்லம் துரையப்பாவின் ஆதனம், தென்மேற்கு முருகேசு இராமநாதயின் ஆதனம், வடமேற்கு முருகேசு நாகலிஙகத்தின் ஆதனம் இதடங்கலும். இது தாயுறுதிகளின்படி பின்வருமாறு விபரிககப்பட்டுள்ளது. வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை கிழககிறை, நில, பரப்பு 3 குளி 16⅛. இதற்கெல்லை கிழககு செல்லம துரையப்பாவின் ஆதனம், வடககு ரோட்டு, மேறகு முருகேசு நாகலிஙகததின் ஆதனம். தெற்கு முருகேசு இராமநாதியின் ஆதனம. இது யாழ்ப்பாணம் காணிப் பதிவு கந்தோரில் D 221/ 47-ன் கீழ் பதியப்பட்டுள்ளது.

வே. கோபாலபிள்ளை,
கொம்மிஷனர்.
Commissioner of Sales.
22. ஆஸ்பததிரி வீதி,
யாழ்ப்பாணம, 3-6-64,
M. 64 5-6-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண
மாவட்டக்கோட்டில்

வழக்கு இலக்கம் M B 5092
அனலைதீவு, அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவு ஐக்கிய சங்கம் (மட்டுப்படுததப்பட்டது)
—வழக்காளி,
எதிராக
அனலைதீவு 1. வேலுப்பிள்ளை இராமநாதனும் மனைவி
2. சண்மணியும் -எதிராளிகள்

இவ்வழககில் எனககுககிடைதத உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனம் 1964-ம்ஞ யூலாய் மீ (ஆடி)மீ 18வ (18-7-64, சனிககிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-மூதல்வட்டி ரூபாய் 1281-63 சதமும், மேலும் 1000 ரூபாவுக்கு 22-9-62தொடக்கம் 11-2-63 வரை வருடமொன்றுக்கு 6%வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுககு 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 183-55 சதமும்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுகள் பகுதி அனலைதீவு கோயிற்பற்று [illegible] இறை 'பெருக்கி சீமான்' நிலப் பரப்பு 10 வீடுகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்குஎல்லை கிழககு ஐயம்பிள்ளை மனைவி செல்லம்மாவினுதனமும் ஒழுங்கையும். வடக்கு ஒழுங்கை, மேற்கு வயித்திலிங்கம் கதிரவேலுவுக்கும் மற்றவர்களுக்கு முரிய ஆதனங்கள் தெற்குபழனிமனைவி வள்ளியம்மையினுதனம். இதில் சொரியலாய் 7/8 பங்கும், அதைச் சேர்ந்தவைகளும். பதிவு C268/17.

வி. செ. குட்டிப்பிள்ளை.
கொமிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். [illegible]
M 61 5-6-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
மாவட்டககோட்டில்

வேலுப்பிள்ளை சின்னையா,
வட்டுக்கோட்டை மேற்கு
—வழக்காளி.
இல. M. B. 5459.
எதிராக
வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்
கைம்பெண் தையல்நாயகி
நல்லூர் —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M,B. 5459-ம் இலகக வழககில் எனக்குக்கிடைதத கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணிகள் 1964-ம் ஆ ஆடிமீ 6-ந்வ திங்கட்கிழமை காலை பத்து மணி தொடக்கம் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைததொகை;

முதலும் வட்டியும் ரூபா 5,362/60 சதமும, இன்னும் வழக்குத தொடர்ந்த திகதி 4-3-63 துவககம் வழககுத தீர்வை முடிந்த திகதி 20-6-63 வரைககும் ரூபா 4,000 - த்திற்கு நூற்றுககு எட்டு வீத வட்டியும் இன்னும் 20-6-63 - ற்கு மேல் முழுத தொகை இறுக்கும் வரைககும் கூட்டிய தொகைககு நூற்றுக்கு ஐந்து வீத வட்டியும், கோட்டுச் செலவும், ஏற்பட்ட செலவு ரூபா 188-75சதம். வெலியாத அச் செலவு ரூபா 56-17 சதம். இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபா 42-22 சதம்.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப் பகுதி, வட்டுககோட்டைக கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு 'உடுககியவளை" பரப்பு நில. லாச்சம் 20, கல்வீடும், தலைவாசலும், குசினியும், கிணறும, வான்பயிர், செய்பயிர்களும். எல்லை கிழக்கு அருணாசலம ஐயா முத்துவுககும் மறுபேருக்குமுடைய ஆதனமும், ஒழுங்கை முகப்பும். மார்ககண்டு ஐயாத துரையினுதனமும். வடக்கு பிள்ளையர் கோவிலினுதனம், மேற்கு பிள்ளையார் கோவிலாதனமும், ஆறுமுகம் வயிரமுத்துவினதும் சகோதரங்களினதுமாதனம், தெற்கு ஆறுமுகம் கைம்பெண் வள்ளியம்மையினுதனமும், ஆறுமுகம் கணபதிப்பிள்ளையினுரிமைக் காறரினுதனமும். இதில் முழுவதிலும் இதைச் சேர்ந்தவைகளிலும் சொரியலாய் மூன்றிலொன்று. கிணற்றில் மற்றும் பங்காளருக்குரிய பங்கு பிறநீங்கலாக,

2. மேற்படிக் கோவிற்பற்று. "கற்களியில் தலைமடைகாடும் காட்டுத்தறையும்" பரப்பு. நில லா. 29, பனைகளும். எல்லை கிழக்கு ஆறுமுழ ஒழுங்கை, வடக்கு வேலுப்பிள்ளை கந்தையாவின உரிமைக்காரரினுதனம், மேற்கு வைரமுத்து ஆறுமுகததினுரிமைக்காறரினுதனம், தெற்கு சரவணப்பெருமாள் வேலுப்பிள்ளையினுரிமைக்காறரினுதனம் இது முழுவதும் வடககெல்லைக் காணிக்குளிருககும் கிணற்றுப் பங்கும் தூர்வையுரித்தும், வழிவாய்க்காலுரித்தும் தெற்குப் பக்கத்திலிருககும் கிணற்றில் நாலிலொரு பங்கும், தூர்வையுரித்தும் வாய்க்காலுரிததும்,

க. பொன்னுத்துரை,
கொம்மிஷனர்.
"அகிலம்"
28/1 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
M 55 29-5-64,

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாய் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14. சிறுப்பர்.

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு
வழக்கு இல, 7396.
வழக்காளி:
1. வீரன் கணபதி
கரவெட்டி மேற்கு

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு இல. 545T. ஈவைவதத காலம்சென்ற கணபதி கந்தனின் நத்தவகாரி
1, கரவெட்டி மேற்கு, சிலப்பன் கதிரன் கைம்பெண் வள்ளி.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனககு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் காணும் ஆதனம் 1964-ஆ ஆடிமீ 4-ம்வ சனிககிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனவிடமாயிருந்து என்னுல் பிரசிதத ஏலததில் விற்கப்படும்,

ஆதன இடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி, கரவெட்டி கோயிற்பற்று கரவெட்டி வென்றி குறிச்சியிறை "சிற்சிங்கராயன் குடியிருப்பு" நில, பர. 11⅞. இது யாழ்ப்பாண டிஸ்திறிககோட் பிரிவிடல்வழக்கு இலக்கம் 22354 தீர்வைப்படி உலார்தா மேஸ்தர் கார்த்திகேசு கணபதிப்பிள்ளையால் 1928-ம் ஆ ஐப்பசிமீ 8-ம்வ 5117-ம் இலகத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நில, பர. 12, குளி 2 27/ 2, இதில் 2-ம் நம்பர்த் துண்டுக்கு நில.பர. 2 குளி 7 9/32 இதற்குட்பட்ட பனைகள். வடலிகள், மாமரங்கள், பலாமரங்கள், தென்னை மரங்களும், வேப்பமரங்களும், எல்லை கிழக்கு கந்தன் பெண் சிவகாமிக்குரிய ஆதனம்' வடக்கும் தெற்கும் காலஞ்சென்ற கணபதி கந்தனுக்குரிய ஆதனம், மேற்கு சரவணை பெண் வள்ளியார், இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் 3-ம் துண்டில் உள்ள கிணற்றில் நாலில் ஒரு தண்ணீர்ப் பங்கும் 4-ம் துண்டுககு ஊடாக வரும் வழி வாய்ககால் உரித்தும்,

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | | 1609-58 |
| வட்டி 7வீதம் 1609-58 ரூபாவுககு 6-4-62 தொடக்கம் 2-2-63 | | 67-60 |
| வட்டி 5வீதம் 1677-18 ரூபாவுக்கு 20-2-63 தொடக்கம் 17-9-63 | | 48-92 |
| | | 1726-10 |
| செலவு பணம் | | 251-33 |
| | | 1977-43 |
| வட்டி 5% 1977/43 ரூபா, 17-9-63தொடக்கம் 8-4-64, | | 49-00 |
| | | 2026-43 |

கா முத்துக்குமாருஜயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales& Valuer.
சந்திதிவேல்,
பருத்தித்துறை. 17-5-64.
M 52 5-6-64.

## யாழ்ப்பாணத்தில்... ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற பல்கலைக் கழகப் பிரவேசப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அகடோபரில் கல்விபயில ஆரம்பிப்பார்கள். இவ்வருடம் டிசம்பர் மாதததில் பலகலைக் கழகப் பிரவேசப் பரீட்சை நடைபெறமாட்டாதெனவும் அடுத்தவருடம மார்ச்சு மாதத்திலே ஷை பரீட்சை நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற
பவுண், வைர ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்:
எல். கே. எஸ்.
"தங்க மாளிகை"
கன்னுதிட்டி, :: யாழ்ப்பாணம்
போன்: 281. தந்தி: ஜுவல்லர்ஸ்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில்: யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 5-6-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org